# கடலூரில் - கருணையே உருவான முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்று, சாலைகளின் இருமருங்கிலும் கரையுடைத்த வெள்ளமென மக்கள் திரண்டிருந்த கண்கொள்ளாக் காட்சிகள்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், (21.2.2025) கடலூர் சென்ற வழியில் திண்டிவனம் சந்திப்பில் – கழகத்தினர், பொதுமக்கள் பல்லாயிரவர் திரண்டு அளித்த உற்சாக வரவேற்பு.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோது, பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக செல்லும் வழியில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, சிறுவர்களுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக செல்லும் வழியில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, மாணவிகளிடம் உரையாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோது, பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புதிய வருமான வரி சட்ட மசோதாவின் உட்பிரிவுகளை ஆராய்வதற்காக 31 உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் நியமிக்கப்பட்டதற்கான சான்றிதழை வடசென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

### ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல்

# அன்னைத் தமிழைக் காக்க உறுதியேற்போம்!

## உலகத் தாய்மொழி நாளில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிவு!

**சென்னை, பிப்.23-**

**உலகத் தாய்மொழி நாளையொட்டி, கழக துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி விடுத்த வலைதளப் பதிவில், “ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல் அன்னைத் தமிழைக் காக்க உறுதியேற்போம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வலைதளப் பதிவு வருமாறு:

வாழ்க நிரந்தரம் - வாழ்க தமிழ் மொழி - வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம்



வீசி இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி! என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று சுடர்க தமிழ்நா டே!

உயிராக, வாழ்வியல் நெறியாக, அறமாக, சினமாக, சிந்தனை மொழியாக, அறிவியல் வழியாக, தமிழரின் தனிப்பெரும் உணர்வாக, உலக மொழிக்கெல்லாம் ஒளிதரும் செம்மொழியாக உதிரத்தில் கலந்துவிட்ட தாய்த் தமிழை போற்றி வணங்கிடுவோம்.

ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல் அன்னைத்தமிழைக் காக்க உறுதியேற்போம்! தமிழ் வாழ்க!

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.